உ

வேலுமயிலுந்துணை.

—(-)—

திருப்புல்வயல்.

குருபாததாசர்

அருளிச்செய்த

குமரேசர்சதகம்.

இஃது.

சரவணபுரம்.

சண்முகமுதலியா ரவர்களால்

பார்வையிடப்பட்டு.

[-]

புரசபாக்கம்.

எழுமலைப்பிள்ளை

அவர்களது.

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1894

உ

திருச்சிற்றம்பலம்.

குமரேசர்சதகம்.

காப்பு.

வெண்பா.

பூமேவுபுல்லைப் பொருந்துகுமரேசர்தம்மேல்
தேமேவியசதகஞ் செப்பவே-கோமேவிக்
காக்குஞ்சரவணத்தான் கம்பகும்பத்தைந்துசாக்
காக்குஞ்சரவணத்தான் காப்பு.

அவையடக்கம்.

மாரிக்குநிகரென்றுபனிசொரிதல்போலவுமனைக்குநிகரென்றுசிறுபெண், மணல்வீடுகட்டுவதுபோலவுஞ் சந்திரன்முன் மருவுமின்மினிபோலவும், பாருக்குநல்லோர்முனேபித்தர்பலமொழிபகர்ந்திடுஞ்செயல்போலவும், பச்சைமயிலாடுதற்கிணையென்றுவான்கோழி பாரிலாடுதல்போலவும், பூரிக்குமினியகா வேரிக்குநிகரென்று போதுவாய்க்கால்போலவும், புகல்சிப்பிமுத்துக்குநிகராப்பளிங்கைப்பொருந்தவைத்ததுபோலவும், வாரிக்குமுன்வாவிபெருகல்போலவுமின்சொல்வாணர்முதுகந்துபுல்லை, வாலகுமரேசர்மேற் சதகம்புகன்றனன் மனப்பொருத்தருள்புரியவே.

குமரேசர்மகிமை.

பூமிக்கோராறுதலையாய்வந்துசரவணப்பொய்கைதனில்விளையாடியும், புனிதற்குமந்திரவுபதேசமொழிசொல்லியும் போதனைச்சிறையில்வைத்து, நேமிக்கவரிபாப்பிரமாதிகட்குஞ் ஜெயிக்கமுடியாதசூரனைத்தேகங்கிழித்துவடிவேலினாலிரு கூறுசெய்தமரர்சிறைதவிர்த்தும், நேமிக்குனன்பரிடருற்றசமயந்தனினினைக்குமுன்வந்துதவியும், நிதமுமெய்த்துணையாய்விளங்கலாலுலகிலுனைநிகரானதெய்வமுண்டோ, மாமிக்கதேன்பருகுபூங்கடம்பணியுமணிமார்பனேவள்ளிகணவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (க)

அந்தணரியல்பு.

குறையாதகாயத்ரியாதிசெபமகிமையுங்கூறு சுருதிப்பெருமையும், கோதிலாவாகமபுராணத்தின்வளமையுங் குலவுயாகாதிபலவும், முறையாநடத்தலாற்சகலதீவினைகளையுமுளரிபோலேதகிப்பார், முதன்மைபெறுசிலைசெம்புபிருதிவிகளிற்றெய்வமூர்த்தமுண்டாக்குவிப்பார், நிறையாகநீதிநெறிவழுவார்களாகையானின்மழைபொழிந்திடுவதும், நிலமது செழிப்பதுமாசர்செங்கோல்புரியுநிலையுமாநலர்செய்தவமும், மறையோர்களாலேவிளங்குமிவ்வுலகத்தின் பானிடத்தெய்வமிவர்காண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (உ)

அரசரியல்பு.

குடிபடையிலபியான மந்திராலோசனைகுறிப்பறிதல் சத்யவசனம், கொடைநித்தமவரவர்க்கேற்றமரியாதைபொறைகோடாத சதுருபாயம், படிவிசாரணையொடுப்ராதானிதளகர்த்தரைப் பண்பறிந்தேயமைத்தல், பல்லுயிரெலாந்தன்னுயிர்க்குநிகரென்றேபரித்தல்குற்றங்களை தல்துடிபெறுசனக்குறுதியானநட்பகமின்மை சுகுணமொடுகல்வியறிவு, தோலாதகாலமிடமறிதல்வினைவலிகண்டுதுஷ்டனிக்கிரகசௌரியம், வடிவுபெறுசெங்கோனடத்திவருமரசர்க்குவழுவாதமுறைமையிதுகாண் மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௩)

வணிகரியல்பு.

கொண்டபடிபோலும்விலைபேசிலாபஞ்சிறிது கூடிவரவுமுனைப்பர், கொள்ளுமொருமுதலுக்குமோசம்வாராதபடிகுறுகவே செலவுசெய்வார், வண்டப்புறட்டர்தாமுறிதந்துபொன்னடகுவைக்கினுங் கடனீந்திடார், மருவுநாணயமுளோர் கேட்டனுப்பினுமவர் வார்த்தையிலெலாங்கொடுப்பார், கண்டெழுதுபற்றுவரவழினின் மயிர்பிளந்தேகணக்கிலணுவாகினும்விடார், காசுவீணிற்செலவிடாருசிதமானதிற்கனதிரவியங்கள்விடுவார், மண்டலத்தூடுதனவர்த்தகஞ்செய்கின்றவணிகர்க்குமுறைமையிதுகாண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே, (௪)

வேளாளரியல்பு.

நல்லதேவாலயம் பூசைநடப்பதும் நாடோறுமழைபொழிவதும், நாடியதபோதனர்கண்மாதவம்புரிவதுநவில்வேதவேதியரெலாம், சொல்லரியயாகாதிகன்மங்கள்செய்வதுஞ்சொல்புவிசெழிக்குநலமும், சுபசோபனங்களுங்கொற்றவர்கள் செங்கோல் துலங்குமனுநெறிமுறைமையும், வெல்லரியசுகிர்தமொடுவர்த்தகன்கொள்வினையும்விற்பனையுமதிசயநலமும், மிக்கவதிகாரமுந்தொழிலாளர்சீவனமும்வீராணசூரவலியும் வல்லமைகள்சகலமும் வேளாளர்மேழியால்வாழ்வினால்விளைவதன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫)

பிதாக்கள்.

தவமதுசெயதேபெற்றெடுத்தவன் முதற்பிதாதனை வளர்த்தவனொருபிதா, தயையாகவித்தையைசாற்றினவனொருபிதா சாந்தசற்குருவொருபிதா, அவமறுத்தாள்கின்றவரசனொரு பிதானல்லவாபத்து வேளைதன்னில், அஞ்சலென்றுற்றதுயர்தீர்த்துளோனொருபிதாவன்புளமுளோனொருபிதா, கவளமிடுமனைவியைப்பெற்றுளோனொருபிதா கலிதவிர்த்தவனொருபிதா, காசினியினிலிவரைநித்தம்பிதா வென்றுளங்கருதுவதுநீதியாகும், மவுலிதனின்மதியரவுபுனைவிமலருதவுசிறுமதலையெனவருகுருபரா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (ரு)

ஒன்றையொன்றுபற்றியிருப்பன.

சத்தியந்தவறாதிருப்பவரிடந்தனிற்சார்ந்து திருமாதிருக்கும், சந்ததந்திருமாதிருக்கும்விடந்தனிற்றனது பாக்கியமிருக்கும், மெய்த்துவருபாக்கியமிருக்கும் விடந்தனில் விண்டுவின்களையிருக்கும், விண்டுவின்களைபூண்டிருக்கும்விடந்தனின் மிக்கானதயையிருக்கும், பத்தியுடனினியதயையுள்ளவரிடத்தினிற் பகர்தருமமிகவிருக்கும், பகர்தருமமுள்ளவரிடந்தனிற்சத்துருபலாயனத்திறலிருக்கும், வைத்திசைமிகுந்ததிறலுள்ளவரிடத்தில்வெகுமன்னுயிர்சிறக்குமன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (எ)

இவர்க்கிவர்தெய்வமெனல்.

ஆதுலர்க்கன்னங்கொடுத்தவர்களேதெய்வமன்பானமாணுக்கருக்கரியகுருவேதெய்வமஞ்சினோர்க்காபத்தகற்றினோனேதெய்வமாம், காதலுறுகற்புடைய மங்கையர்தமக்கெலாங்கணவனேமிக்கதெய்வம், காசினியின்மன்னுயிர்தமக்கெலாங்குடிமரபுரக்கமன்னவர்தெய்வமாம், ஓதரியபிள்ளைகட்கன்னைதந்தையர்தெய்வமுயர் சாதிமாந்தர்யார்க்கும், உறவின்முறையார்தெய்வம்விசுவாசமுள்ளபேர்க்குற்றசிவபத்தர்தெய்வம், மாதயையினாற்சூத்திரர்க்குமறையோர்தெய்வம்வானவர்க்குத்தெய்வம்நீ மயிலேறிவிளையாடுகுகனேவயனீடுமலைமேவுகுமரேசனே. (அ)

இவர்க்கிதுநினைவெனல்.

ஞானநெறியாளர்க்கு மோட்சத்திலேநினைவு நல்லறிவுளோர்தமக்கு நாடோறுந்தருமத்திலேநினைவுமன்னவர்க்கு ராச்சியந்தன்னில்நினைவு, ஆனகாமுகருக்குமாதர்மேலே நினைவுளஞ்சாததிருடருக்கிங், கனுதினங்களவிலேநினைவுதனவணிகருக்காதாயமீதுநினைவு, தானமிகுகுடியாளருக்கெலாம்வேளாண்மைதனினினைவுகற்பவர்க்கு, தருகல்விமேனினைவு வேசியர்க்கினியபொருடருவோர்கண்மீதுநினைவு, மானபரனுக்குமரியாதைமேலேநினைவுமாருடமீதுநினைவு, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (கூ)

இவர்க்கிது இல்லையெனல்.

வேசைக்குநிசமில்லைதிருடருக்குறவில்லைவேந்தர்க்குநன்றியில்லை மிடியர்க்குவிலை தாதாமீதுவஞ்சணையில்லைமிலேச்சர்க்குநிறையதில்லை, ஆசைக்குவெட்கமில்லைஞானியானவனுக்குளகமில்லைமூர்க்கன்றனச், சன்பில்லைகாமிக்குமுறையிலலைகுணமிலோர்க்கழகில்லைசித்தசுத்தன் பூசைக்குரவிலங்கசுத்தியில்லைய வுமுணர்புலவனுக்கயலோரில்லை புலவனுக்கன்றுமுசிதானுசிதமில்லைவருபுலைபர்க்கிரக்கமில்லை, மாசைத்தவிர்த்தமதிமுகதெய்வயானையொடுவள்ளிக்கிசைக்கணவாமயிலேறிவிளையாடுகுகனே புல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௰)

இப்படிப்பட்டவரிவரெனல்.

நியாயநெறிதவறாமலுலகபரிபாலனநடத்துமவனேயரசனும், ராஜயோசனைதெரிந்துரிதியாகியசெய்திகளிலுமவனேமந்திரி, நேயமுடனே தன்சரீரத்தைதயெண்ணாதுநிர்வாகியேசூரனும், நிலைபெறுமிலக்கணவிலக்கியமறிந்துசொலுநிபுணாவிவேகவிஞனும், ஆயதொருவாதாகடந்துவிசிதானமுமறியுமதியோன்வயித்தியன், அகமின்றிமெய்யுணர்ந்தைப்புலனொழித்துவிட்டவனேமெஞ்ஞானியெனலாம், மாயவர்சகோதரிமகிழுன்மணிக்கன்பானவரபுத்ரவடிவேலவர், மயிலேறி விளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௰௧)

விலக்கத்தகுவனவிவையெனில்.

அக்கினியைவய்மூர்க்க துர்ச்சனனைவஞ்சமனை யாளைவளர் பயிர்செள்ளையை, அஞ்சாவிரோதிகளையநியாயமுடையோனாயகீர்த்தியப்பெண்களர்ப்பைக், கைக்கினியதொழிலாளியைக்கொண்டவடிமையைக்களவுசெய்யுந்திருடனை, கருதியவிசாரத்தையடக்கமில்பவிசையைக்கடிதானகோபந்தனை, மெய்க்கினிதலாய்ப்பிணியையனையுசா சனத்தைவினைமூண்டிடுஞ்சண்டையை, விஷமேறுகோபத்தையன்றடக்குவதலான் மிஞ்சவிடலாகாதுகாண், மைக்கினியகன்னிகுறவள்ளிசுரகுஞ்சரியைமருவிவளர்பேரழகனே மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௰௨)

இவர்க்கிது துரும்பெனல்.

தாராளமாகக்கொடுக்குந்தியாகிசடமக்குநற்பொருடுரும்பு, தன்னுயிரையெண்ணாதசூரனுக்கெதிராளிகளமொமொருதுரும்பு, பேரானபெரியருக்கற்பாதுகையினிற்பிரயோசனந்துரும்பு, பெரிதானமோட்சசிந்தனையுள்ளவர்க்கிகலாம்பெண்போகமொருதுரும்பு, தீரதசகமுவெறுத்ததுறவிக்கு விறல்சேர்வேந்தனொருதுரும்பு, செய்யகலைநாமங்கள்கடாட்சமுள்ளோர்க்கெலாஞ்செந்தமிழ்க்கவிதுரும்பாம், வாராருவணிகொள்முலைவள்ளிசுரகுஞ்சரியை வதுவைசெயும்வடிவேலவர், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௰௩)

இதனைவிளக்குவதிதுவெனல்.

பகல்விளக்குவதிரவிநிசிவிளக்குவது மதிபார்விளக்குவதுமேகம், பதிவிளக்குவதுபெண்குடிவிளக்குவதரசுபரிவிளக்குவதுவேகம், இகல்விளக்குவதுவலி நிறைவிளக்குவது நலமிசைவிளக்குவது, சதியுரினம்விளக்குவதுகுடியுடல்விளக்குவதுண்டியினியசொல்விளக்குவதருள், புகழ்விளக்குவதுகொடைதவம்விளக்குவதறிவு பூவிளக்குவதுவாசம், பொருள்விளக்குவதுதிருமுகம்விளக்குவது நகைபுத்திவிளக்குவதுநூல், மகவிளக்குவதுமறைசொல்விளக்குவதுநிசம்வாவியை விளக்குவதும்நீர், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ()

பிறப்பிடநன்மையால்நன்மைபொருமை.

சிங்காரவனமதிலுதிப்பினும் காகமதுதீஞ்சொல் புகல்குயிலாகுமோ, திரையெறியும்வாவியற்பூத்தாலுமேகொட்டி செங்கஞ்சமலராகுமோ. அங்கானகத்திற்பிறந்தாலுமுயலானதானையின்கன்றாகுமோ, ஆண்மையாகியநல்லகுடியிற்பிறந்தாலுமசடர்பெரியோராவரோ, சங்காடுபோற்கடல்பிறந்தாலுநத்தைதான் சாளக்கிராமமாமோ, தடமேவுகடல்நீரிலேயுப்புவிளையினுஞ்சாரசற்கரையாகுமோ, மங்காதசெந்தமிழ்க்குறுமுனிக்குபதேசம்வைத்தமெய்ஞ்ஞானகுருவே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௰௫)

பலர்க்கும்பயன்படுவன.

கொண்டல்மொழிமாரியுமுதாரசற்குணமுடையகோவமுருணியிநீரும், கூட்டமிடுமம்பலத்துருதருவிநீழலும் குடியாளர்விவகாரமும், கண்டவர்களெல்லாம்வரும்பெருஞ்சந்தியிற்கனிபலபழுத்தமரமு, கருணையுடன்வைத்திடுந்தண்ணீர்ப்பந்தலும்பெருகுகாவேரிபோல் ஊற்றமும் விண்டலத்துறைசந்திராதித்தகிரணமும் வீசுமாருதசீதமும்,விவேகியெனுநல்லோரிடத்திலுறுசெல்வமும்வெகுசனர்க்குபகாரமாம்,வண்டமர்கடப்பமலர்மாலையணிசெங்களபமார்பனேவடிவேலவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௰௬)

தாமழினுங்குணமழியாதவை.

தங்கமானதுதழலினின்றுருகிமருகினுந் தன்னொளிமழுங்கிடாது சந்தனக்குறடுதான்மெலிந்துதேய்ந்தாலு மோதன்மணங்குன்றிடாது, பொங்கமிகுசெங்கு செந்தழலின்வெந்தாலுமோ பொலிவெண்மைகுறைவுறாது, போதவேகாய்ந்துசற்பால்குறுகினாலும் பொருந்துசுவைபோய்விடாது, துங்கமணிசாணையிற்றேய்ந்துவிட்டாலுந்துலங்குகுணமொளிடாதுபின், தொன்மைதருபெரியோர்மடிந்தாலுமவர்களதுதூயநிறைதவறுகுமோ,மங்களகல்யாணிகுறமங்கைசுரகுஞ்சரியை மருவுதிண்புயவாசனே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௰௭)

நரகில்வீழ்வோர்.

மன்னரைச்சமரில்விட்டோடினவர்குருமொழிமறந்தவர்கொலைப் பாதகர், மாதாபிதாவைநிந்தித்தவர்கள் பரதாரமருவித்திரிந்தபேர்கள், அன்னங்கொடுத்தபேருக்கழிவையெண்ணினோரசடக்கியவமைச்சர், ஆலயமிருந்தவர்கள்விசுவாசகாதகரருந்தவர்தமைப்பழித்தோர், முன்னுதவியாச்செய்தநன்றியைமறந்தவர்முகஸ்துதிவழக்குரைப்போர், முற்றிசிவபத்தரைநடுங்கச்சினத்தவர்கள் முழுதும்பொய்யுரை சொல்லுவோர், மன்னொருவர்வைக் பொருளபகரித்தோரிவர்கள்மாநரகில் வீழ்வரன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

சரீரசுகம்.

மாதத்திரண்டுவிசைமாதரைப்புல்குவது மறுவறுவிரோசனந்தான், வருஷத்திரண்டுவிசைதைலந்தலைக்கிடுதல்வாரத்திரண்டுவிசையாம் மூதறிவினொடுதனது வயதினுக்கிளையவொரு மொய்குழலுடன் சையோகம், முற்றுதயிர்க்காச்சுபாநீர்மோருருக்குநெய்முதிரா வழுக்கையிளநீர், சாதத்திலெவ்வளவானாலும்புசித்தபின்றாகந்தனக்குவாங்கல், தயையானவுண்டபினுலாவலிவைமேலோர்சரீரசுகமாமென்பர்காண், மாதவகுமாரிசாரங்கத்துதித்தகுறவள்ளிக்குகந்தசரசா மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௰௬)

யார்க்குமனுபோகம்விடாமை.

தேசுபெறுமேருப்பிரதட்சணஞ்செய்துமதிதேகவடுநீங்கவில்லை, திருமாலுறங்கிடுஞ்சேடனுக்குவணன்செறும்பகையொழிந்ததில்லை, ஈசன்கழுத்திலுறுபாம்பினுக்கிறைவேறிலாமலேவாயுவாகும், அணியகண்ணாகிவருபருதியானவனுக்கிராகுவேகனவிரோதி, ஆசிலாப்பெரியோரிடத்தினிலடுக்கினுமமைந்தபடியன்றிவருமோ, அவரவர்களனுபோகமனுபவித்திடல்வேண்டுமல்லால்வெறுப்பதெவரை, வாசவனுமும்பரனைவரும்பிசையஜயவென்றுவந்துதொழுதேத்துசரணா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௨௰)

இதுவின்றிஇதுசிறவாதெனல்.

குருவிலாவித்தைகூறறிவிலாவாணிபங்குணமிலாமனைவியாசை, குடிநலமிலாநாடுநீதியில்லாவரசுகுஞ்சரமிலாதவெம்போர், திருவிலாமெய்த்திரமைபொறையிலாமாதவர்தியானமில்லாநிஷ்டை, தீபமில்லாதமனைசோதரமிலாதவுடல்சேகரமிலாதசென்னி, உருவிலாமெய்வளமைபசியிலாவுண்டிபுகலுண்மையில்லாதவசனம், யோசனையிலாமந்திரிதைரியமிலாவீரமுதவியில்லாதநட்பு, மருவிலாவண்ணமலர்பெரியோரிலாசபைவைத்திருந்தென்னபயன்காண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.

பகைக்கப்படாதவரிவரெனல்.

அரசர்பகையுந்தவம்புரிதபோதனர்பகைமரிய கருணீகர்பகையும் அடுத்துக்கொடுப்போர்கொடும்பகையுமுட்பகையுமருளிலாக்கொலைஞா

பகையுமலைஞர்பகையும்விரகுமிகுமூரிலுள்ளோருடன்பகையுமிகுவிகட ப்ராசங்கிபகையும், வெகுசனப்பகையுமந்திரவாதியின்பகையும்விழை மருத்துவர்கள்பகையும், உரமருவுகவிவாணர்பகையுமாசான்பகையுமூ ரவின்முறையார்கள் பகையும், உற்றதிரவியமுளார்பகையுமந்திரிபகை யுமொருசிறிதுமாகாதுகாண், வரதியின்மதலையெனவினியசரவணமி சையில்வருசரணசிறுகுழவியே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வய னீடுமலைமேவுகுமரேசனே. (௨௨)

பேயெனப்படுவோரிவரெனல்.

கடனுதவுபேர்வந்துகேட்குவேளையின்முகங் கடுகடுக்கின்றபேயு ம், கனமருவுபெரியதனம்வந்தவுடனிறுமாந்து கண்விழிக்காத பேயும், அடைவுடன்சத்துருவின்பேச்சைவிசுவாசித்தகப்பட்டுழன்றபேயும், ஆ சைமனையாளுக்குநேசமாயுண்மைமொழியானதை யுரைத்தபேயும், இ டரிலாநல்லோர்கள் பெரியோர்களைச் சற்றுமெண்ணாதுரைத்தபேயும், இனியபரிதானத்திலாசைகொண்டொருவற் கிடுக்கண்செய்திட்டபோ யும், மடமனையிருக்கப்பரத்தையைப்புணர்பேயும்வசைபெற்றபேய்களெ ன்றே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.

அவ்வவ்வினத்திலுயர்ந்தவை.

தாருவிற்சந்தான நதியினிற் கங்கைவிரதத்தினிற்சோமவாரம், த கைபெறுநிலத்தினிற் காஸ்மீரகண்டந் தலத்திற்சிதம்பரதலம், சீருலவு ரிஷிகளில்வசிஷ்டர்பசுவிற்காமதேனுமுனிவரினாரதன், செல்வநவமணி களிற்றிகழ்பதுமராகமணிநீதமலரிலம்போகரும், பேருலவுகற்பினிலரு ந்ததிகதித்திடுபெலத்தின்பாருகம்யானையிற், பேசிலையிராவகர் தமிழி னில்கத்தியம் பிரணவம்மந்திரத்தில், வாரிதியிலே திருப்பாற்கடல்குவ ட்டினின்மகாமேருவாகுமன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீ டு மலைமேவுகுமரேசனே, (௨௪)

அவரவர்க்குப்பெலமாவன.

அந்தணர்க்குயர்வேதமேபலங்கொற்றவர்க் கரியசௌரியமேபெ லம், ஆனவணிகர்க்குநித்யேபெலஞ்சூத்திரர்காயினேகுழவேபெலம், ம ந்திரிக்குச்சத்துருபாயமேபெலநீதி மானுக்குநடுவேபெலம், மாதவர்க் குத்தபசுபலமடவியர்க்குநிறை மானமிகுகற்பேபெலம், சந்திரமிகுந்த கதை சேவகர்தமக்கெலாப்சாமிகாரியமேபெலம், சான்றவர்க்குப்பொ றுமையேபெலம்புலவோர்தமக்குநிறைகல்விபெலமாம், வந்தனைசெயும் பூசைசெய்பவர்க்கன்புபெலமாலவடிவானவேலா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௨.௫)

இருந்தும்பயன்படாதவை.

தருணத்திலுதவிசெய் யாதநட்பாளர்பின்தந்தெனதராயலென்ன, தராதரமறிந்துமுறைசெய்யாத மன்னரைச்சார்ந்தென்ன நீங்கிலென்ன, பெருமையுடனுண்மையில்லாதவொருபிள்ளையை பெற்றென பெறாமலென்ன, பிரியமாயுள்ளன்பிலாதவர்களேசம் பிடித்தென்ன விடுக்கிலென்ன, தெருளாகமானமில்லாததொரு சீவனஞ்செய்தென செயாமலென்ன, ஏகியெனவருபவர்க்கீயாத செல்வஞ் சிறந்தெனமுறிந்துமென்ன, மருவிளமானினில்லாதகன்னிகைபின்பு வந்தெனவாராமலென்ன, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௨௬)

உபகாரமில்லாதவை.

கடனீர்மிகுந்தென்னவொதிதான் பெருத்தென்ன காட்டிலவுமலரிலென்ன, கருவேல்பழுத்தென்னநாய்பால் சுரந்தென்னகானின்மழை பெய்துமென்ன, அடர்சமுத்திரதலத்தினில்பெல்லாங்கு வித்தென்னவரியகுணமில்லாதபெண், அழகாயிருந்தென்னவாஸ்தான கோழைபலவரிய நூலோதியென்ன, திடமினியபூசம்வெகு பொன்காத்திருந்தென்ன திறன்மிகுந்சரடியமிர்தான், செறிவாகிநீண்டென்னவஸ்த்ரபூஷணமெலாஞ் சித்திரத்துவமென்னமடமிகுந்தெவருக்கு முபகாரமில்லாதவம்பர்வாழ்வுக்குநிகராம், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௨௭)

பதரெனப்படுவோர்.

தன்பெருமைசொல்லியே தன்னைப்புகழ்ந்தபதர் சமர்கண்டொளிக்கும்பதர், நக்கபெரியோர்புத்திகேளாத தர்தோழர்தம் மொழிசலிக்கும்பதர், பின்புகாணுமிடந்தனிலேபுறணிபலபேசிக் களிக்கும்பதர், பெற்றதாய்தந்தைதுயர்பட வாழ்ந்திருந்தபதர் பெண்புத்திகேட்கும்பதர், பொன்பணமிருக்கவேபோயிரக்கின்றபதர் பொய்சாட்சி சொல்லும்பதர், பவியோர்கடத்தையையிகழ்ந்த தர்தன்மனைவி புணர்தல்வெளியாகும்பதர், மன்புணரும்வேசையுடன்விடசரிக்கின்றபதர் பனிசரிற்பதரென்பர்காண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௨௮)

காணுவிடிற் றுயரப்படுமவை.

இரவிகாணுதவனமரிகாணுதபயிர்த்துகாணுக்குமுதம், ஏந்தல்காணாடுகளைகள்காணுவோடமின்சொல் காணுவிருந்து, சுரபிகாணுதகன்றன்னைகாணுதமதலைசோலைகாணுதவண்டு, தோழர்காணுநேயர்கலைகள்காணுதமான்சோடுகாணுதபேடு, குறவர்காணுதசபை தியாகிகாணுவறிஞர்கொழுநர்காணுதபெண்கள், கொண்டல்காணுதமயில்சிறுவர்காணுவாழ்வுகோடைகாணுதகுயில்கள், வரவுகாணுதசெலவிவையெலாம்புவிமீதில்வாழ்வுகாணுவிளையும், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௨௯)

வியாதிமூலங்கள்.

கல்லினான் மயிரினான் மீதூண்விரும்பலாற் கருதியவிசாரத்தினால், கவெழிநடக்கையான் மலசலமடக்கையாற் கனிபழங்கறியுண்ணலால், நெல்லினாலுமியினாலுண்டபின்மூழ்கலா னித்திரைக ளில்லாமையால், நீர்ப்பனியினாற்பனிக்காற்றினுடனேயலைதலானீடுசெருக்கிலே யருந்தலால், மெல்லியலார்கல்வியதிக மூளவிரும்பலால் வீழ்மலஞ்சிக்குகையினால்மிகுசுமையெடுத்தலால் விளைவெயிற் காய்தலான் மெய்வாட்டவேலைசெயலால், வல்லிரவிலே தயிர்கள்சாகாதியுண்ணலான்வன்பிணிக்கிடமென்பர்காண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவு குமரேசனே. (௰௫)

செத்துஞ்சாகாதவர்.

அனைவர்க்குமுபகாரமாமவாவி கூலமுண்டாக்கினோர் நீதிமன்னர் அழியாததேவாலயங்கட்டிவைத்துளோரகங்கள்செய்தபெரியோர், கனையொப்பிலா புதல்வனைப்பெற்றபேர்பொருது சமர்வென்றசூரவீரர், தாணிநனிநிலைநிற்க வெந்நாளுமாறாத தருமங்கள்செய்தபேர்கள், கனவித்தைதகொண்டவர்களேயாத கொடையாளர் காவியஞ் செய்தகவுஞர், கற்பினின்மிகுந்தவொரு பத்தினி வடந்தையைக்கடிமணஞ்செய்தோர்களும், மனிதர்கள்சரீரங்கள்போகினுஞ்சாகாதமனிதரிவராகுமன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௧)

சாகாதிருந்துஞ் செத்தவர்.

மாறாதவறுமையோர்தீராதபிணியாளர்வருவேட்டகத்திலுண்போர்மனைவியைவழங்கியேசீவனஞ்செய்குவோர்மன்னுமொருராஜசபையில், துராகநிந்தைசெய்துய்குவோர்சிவிகைகள்சுமந்தேபிழைக்கின்றபேர், தொலையாவிரோதந்தழுந்துவோர்வார்த்தைச் சோர்வுபடலுற்றபெரியோர், விருகமனையாடனக்கஞ்சிவந்திடுவிருந்தினையொழித்துவிடுவோர்,வீம்புடன்செல்லாதவிவகாரமதுகொண்டுமிக்கசபையேறுமசடர், மாறாதவிவரெலாமுயிருடன் செத்தசவமாகியொளியாய்வர்கண்டாய், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௨)

சிறிதும்பயன்படாதவர்.

பதராகிலுங்கனவிபூதிவிளைவிக்கும் பழமைபெறுசுவராகிலும்,பகலருகுமறைவாகுமாடுரிஞ்சிடுமலம்பன்றிகட்குபயோகமாம், கதமிகுகடாவென்னிலுழுதுபுவிகாக்குவல்கழுதையும் பொதிசுமக்கும், கல்லெனிற்றேவர்களுமாலயமுமாம்பெருங்கானபுற்றிமாவுமனையாய், இரமிலாச்சவமாகிலுஞ்சிலர்க்குதவிசெயுமிழிவுறுபிராங்காயினும், இரக்கப்பிடித்தவர்க்குதவிசெயும்வாருகோலேற்றமாளிகைவிளங்கும், மதமதுமிகும்பரமலோபராலுபகாரமற்றொருவருக்குமுண்டோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௩)

உலுத்தரியல்பு

திரவியங்காக்குமொருபூதங்கள்பொற்பணந்தேடிப்புதைத்துவைப்பார்,சீலமாகவுங்கட்டர்ககணல்லமுதுசெய்துண்ணாரறமுஞ்செயார் புரவலர்செய்தண்டந்தனக்கும் வலுதாரப்புகுந்திடருக்குமீவார், புலவரைக்கண்டவுடனேஓடிப்பதுங்குவார்புராணிகர்க்கொன்றுமுதவார், விரகறிந்தேபிள்ளைசோறுகறிதின்னுமளவில்வெகுபணஞ்செலவாதலால், விளையாடவெழவனும் பிள்ளையே பிள்ளையென மிகுசெட்டி சொன்னகதைபோல், வரவுவார்க்கின்றதேயல்லாதுலோபியர்கண் மற்றொருவருக்கீவரோ,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ()

திருவாழிடங்கள்.

கடவாரணத்திலுங்கங்காசலத்திலுங் கமலாசனந்தன்னிலும்,காகுத்தன்மார்பிலுங்கொற்றவரிடத்திலுங்காலியின்கூட்டத்திலும், நடமாடுபயிரிலும்பொய்வார்த்தைசொல்லாத ல்லோரிடந்தன்னிலும், நல்லசுபலட்சணமிகுந்தமனைதன்னிலும் ரணசுத்தவீரர்பாலும், அடர்கேதனத்திலுஞ்சுபம்வரந்தன்னிலுமருந்துளசிவில்வத்திலும், அலர்தருகடப்பமலர்தனிலுமிரதத்திலுமதிககுணமானரூபமடவாரிடத்திலுங்குடிகொண்டுதிருமாதுமாறாதிருப்பதென்றே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௫)

மூதேவிவாழிடங்கள்.

சோரமங்கையர்கணிசமுறையார்கள்வாயினிற்சூதகப் பெண்கணிழலில், சூளையிற்சூழ்கலுழுபுகையிற்களேபரஞ்சுடுபுகையினீசர்நிழலில் காரிரவிலாசுநிழலிற்கடாநிழலினெடுசருகயவிளக்குநிழலில், காமுகரிநிஷ்டையில்லாதவர்முகத்திற்கடுஞ்சினத்தோர்சபையினில், யீரமில்லாக்களாவிலத்திணிவிராத்தயிரிவிழியுமதுபானர்பாலில், இலைவேல்விலாநீழலினிதமழுக்கடைமனையிலேநாயகசுசாத்தாள்,வாரியமுறத்தாள்பெருக்குதூண்மூதேவிமாறாதிருப்பளென்பார், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௬)

சிறுத்தினுந்திருந்தாமை.

சட்டியொருவிட்டுச்செழுந்தேனைவார்க்கினுங் காஞ்சிரங்கைப்புவிடுமோ, கழுதையைக்கட்டிவைத்தேதூபம்வளர்க்கினுங் கதிபெறுங்குதிரையாமோ, குட்டியரவுக்கமுதளித்தேவளர்க்கினுங்கொடுவிஷமலாதுதருமோ, குக்கலினடுவாலுக்குமட்டையைக்கட்டினுங் கோணுமலேநிமிருமோ, ஒட்டியேகுறுணிமையிட்டாலுநயமிலாயோனிகண்ணாகி விடுமோ,உலவுகனகற்பூரவாடைபலகூட்டினுமுள்ளியின்குணமாறுமோ, மட்டிகட்காயிரம்புத்திசொன்னாலுமதின்மார்க்கமறியாதைவருமோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௭)

குறிப்பறிதல்,

மனதிற்கடுப்பதைமுகத்தினாலறியலாமா நிலப்பூடுகளெலாம், மழையினாலறியலாநல்லார்பொல்லார்தமைமக்களாலறியல சூம், சனமருவுசூரனைச்சமரினாலறியலாங்கற்றபொருளின்றுவானைச், சல்விப்பிரசங்கத்தினாலறியலாங்குணங்களைநடையினாலறியலாம், சனசுகபடுத்ததுளினாலறியலாம்சாதிசொல்லாலறியலாம், சருதிகேள்வியால்லறியலாம்பிணிகளைத்தாதுகளாலறியலாம், வனசவிகசிதவனபரிபூரணனந்தலைலவடிவானவேளா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௮)

குணமாறுமை.

குணமிலாதுஷ்டமிருகங்களையுநல்குணப்படுக்கண்டுபடுத்தி விடலாம், கொடியபலவிஷநோய்களியாவுமௌஷதபதுகொடுத்துத் திருப்பிவிடலாம், உணர்விலாப்பிரமராக்ஷசுமுதற்பேய்களையுகந்துகூர்தட்டிவிடலாம், உபாயத்தினாற்பெரும்பறவைக்கு நற்புத்தியுண்டாக்கலாமுயிற்பெறப், பிணமதையெழுப்பலாமக்கினிசுடாமல் பெருப்டனலெனச்செய்யலாம், பிணியையகற்றலாங்காலதூதுவனையும் பின்புவருமென்றுசொலலாம், மணலையுங்கயறுத்திரிக்கலாங்கயவர் குணமட்டுந்திருப்பவசமோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ()

இத்தீக்குணத்தோரிவ்விளர்குபோல்வரெனல்.

தான்பிடித்ததுபிடிப்பென்றுமேலவர்புத்திகள்ளிசெல்வோர்குரங்கு, சபையிற்குறிப்பறியமாட்டாமனின்றவர்தாம்பயனிலாதமரமாம், வீம்பினுலெளியவரையெதிர்பண்ணிநிற்குமொருவெறியர்குரைஞமலியாவார், மிகநாடிவருவோர்முகம்பார்த்திடாலோபர்மேன்மையில்லாதகழுதை, சோம்பலொடுபெரியோர்சபைக்குட்படுத்திடுந்தூங்கலே சண்டிக்கடா, சூதுடனடந்தோர்க்கிடுக்கணேசெயலடுந்துஷ்டனேகொட்டுதேளாம், மாம்பழந்தனைவேண்டியங்காளிலீசனைவலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௪௰)

அற்பர்க்குவாழ்வால்குணம்வேறுபடுதல்,

அற்பர்க்குவாழ்வுசற்றதிகமானால் விழிக்கியாவருருவந்தோன்றிடா, தண்டின்றேநல்லவார்த்தைகளுரைத்தாலுமவர்செவிக்கேறிடாது முற்பக்ஷமானபேர்வருகினும்வாருமென்மொழியவும்வாய்வராது, மோதியேவாதப்பிடிப்புவந்ததுபோலமுன்காலையகலவைப்பார். விற்பனமிகுத்தபெறியோர்செய்திசொன்னாலும்வெடுவெடுத்தேகிநிற்பார், விருதாமகத்துவப்பேயதுசவுக்கடிவிழும்போதுதீருமென்பார், மற்பயந்தன்னிபமாலையணிலோலனேமார்பனேவடிவேலவர், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௪௧)

இதற்குளோரிக்கோல்போல்வரெனல்.

அன்னைதந்தையர்புத்திகேளாதபிள்ளைபோமஷ்டமச்சனியாகுவான் அஞ்சாமலெதிர்பேசிநிற்குமனையாளவாக்கிலங்காரகச்சன்மமாம், தன்னைமிஞ்சிச்சொன்னவார்த்தைகேளாவடிமைசந்திராஷ்டகமென்னலாம் தன்பங்குதாவென்றுசபையேறுதம்பியோசார்ந்தசன்மச்சூரியன், நன்னயமிலாதவஞ்சனைசெய்தமையன் மூன்றாமிடத்தில்வியாழம், நாடோறும்விரோதமிடுகொண்டோன்கொடியதுளோன்ராகுகேதுக்களெல்லாம், மன்னயனையன்றுசிறைதனில்விட்டுநன்பர்க்கு மந்திரமுரைத்தகுருவே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ()

நல்வினைஞ்சேர்பயன்.

சந்தனவிருக்ஷத்தையண்டிநிற்கின்றபலதருவுமவ்வாசனைதரும்தங்கமகமேருவையடுத்திடுங்காக்கையுஞ்சாயல்பொன்மயமேதரும், பர்தம்மிகுபாலுடன்விளாவியதண்ணீரெலாம் பாற்போனிறங்கொடுக்கும், படிகமணிகட்குளேநிற்கின்றவடமுமப்படியேகுணங்கொடுக்கும், அந்தமிகுமரகதக்கல்லைத்தரித்திடிலெடுத்ததும்பசுமையாகும் ஆனபெரியோர்களொடுசேர்க்கைசமதுசெய்யிலவர்கள்குணமொருபென்பர்காண், மந்திரநெடுங்கிரியின் முன்கடல்கடைந்தவரிமருகமெய்ஞ்ஞானமுருகா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௪௩)

வலியோரையுமூழ்விடாமை,

அன்றுமுடிசூடவிருக்குராமன்மூ னருங்காடுறைந்ததென்ன, அண்டரெல்லாமமிர்தமுண்டிடப்பரமனுக்காலம்வயித்ததென்ன வென்றிவருதேவர்சிறைமீட்டநீங்கள்வில்வேடிச்சிலைச்சேர்ந்ததென்ன, மேதினிபடைக்குமயனுக்கொருசிரம் போகியெஞ்சிறையிலுற்றதென்ன, யென்றுமொருபொய்சொலாமன்னனென்விலைபோன தென்னகாண்வல்லமையினுன், எண்ணைதிருமேலொன்றும்வாராதுபாபசிவனெத்தனைப்படிமுடியுமாம்மன்றதனிடைமிகெக்காதான்பெற்றவாபுத்ரவடிவேலவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௪௪)

பெரியோர்வாக்கியபரிபாலனஞ்செய்தோர்.

தந்தைதாய்வாக்கியபரிபாலனஞ்செய்தவன்தசரதகுமாரராமன், சமயனருள்வாக்கியபரிபாலனஞ்செய்தோர் டருமுனிக்கிளையநால்வர், சிந்தையிலுணர்ந்துகுருவாக்கியபரிபாலனஞ்செய்தவனரிச்சந்திரன், தேவியென்றோர்க்கிலையெனவாக்கியபரிபாலனஞ்செய்தவன்றுவகர்ணன், சிந்தைதவிர்வாக்கியபரிபாலனஞ்செய்தவன்பெலமிகுந்தவனுமான், நிறையுடன்பத்தாவின்வாக்கியபரிபாலனநிலத்தினிநளாயினிசெய்தாள், மங்

தைவழிகோயில்குளமூன்குலவதுப்பிமுடன்மகிழ்ந்தாவுனந்தணைவா,மயி
லேறிவிளையாடுகுகனேபுல்வயனிடிமலைமேவுகுமரேசனே. (சரு)

முயற்சியின்மிக்கதூமெனல்.

வங்காளமேறினும்வாருகோலொருகாசுபட்டின்றிய திகமாமோ
வானெறியுயரப்பறந்தாலுமூர்க்குருவிவணணப்பருந்தாகுமோ, கங்காச
லந்தனில்மூழ்கினும்பேய்ச்சுரைக்காய்நல்லசுரையாகுமோ, கடலுக்குள்
காழிபையமுக்கியேமொண்டிடிற்கண்ணுமோமாமாளுழிதான், ஐங்காதமோ
டினுர்தன்வினைகடன்றேடேயடைமாமதீக்கிவிடுமோ ஆரிடஞ்சென்று
லும்வெகுதொலைகள்சுற்றிலுமமைத்தபடியன்றிவருமோ, மங்காதசெ
ந்தமிழ்க்கொண்டநக்கீரர்க்குவந்ததுயர்தீர்த்தமுருகா, மயிலேறிவிளை
யாடுகுகனேபுல்வயனிடிமலைமேவுகுமரேசனே. (சசு)

இடும்பாலழிவு

சூரபத்மன்பெலமுமிராவணன்றீரமுந்துடுக்கான கஞ்சன்வலியும்'
துடியானவிரணியன்வரப்ரசாதங்களுந்தொலையாதவாலிதிடமும், பார
மிகுதுரியோதனதிறற்றுவாதுபராக்கிரமுமதுகைடவர், பாரிப்புமாப
லிதனுண்மையுஞ்சோமுகன்பாங்கிலுறுவல்லமைகளும், யோணவுகிசக
ன்கனரையுந்திரிபுரசெண்ணமுந்தக்கனெழிலும், இவர்களதுசம்பத்து
நின்றவோவவரவர்களிடும்பாலழிந்ததன்றோ, மாரனைக்கண்ணலெரித்த
ருள்சிவன்றந்தவரபுத்ரவடிவேலவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வய
னிடிமலைமேவுகுமரேசனே. (சஎ)

நட்புநிலை.

மாமதியின்முயலானதுதேய்வழித்தேய்ந்துவளருமப்போது வ
ளரும்,வாவிதனலாம்பல்பலகொட்டிகள்தணிநீர்வற்றின்வற்றும் பெரு
கிலுயரும், பூமருவுநல்பூடுகோடையிற்றீழ்ந்திடும்பொங்குகாலந்தழை
க்கும், புண்டரீகமிரவிபோமளவிற்குவிந்திடும்போது தயமாகின்மலரு
ம், தேகமுடலினைக்கிலுயர்கூடவுமினைக்குமது தேரிலுயருஞ்சிறக்கும்,
சேர்ந்தோர்க்கிடுக்கணதுவந்தாலுநல்லோர்சிநேகமப்படியாகுமோவாம
னசொருபமாயானைமுகனுக்கிளையவாலகுருபரவேலவா,மயிலேறி விளை
யாடுகுகனேபுல்வயனிடிமலைமேவுகுமரேசனே

கைப்பலனுமவை

பருவத்திலேபெற்றசேயும்புரட்டாதிபதிசம்பாநடுகையும், பலமி
னியவாடிதனிலாணிவால்போலவேபயிர்கொண்டுவருவாரும்பும், கருணை
யொடுமிக்கரணயமுளோராக்கையினிற்கடனிட்டுவைத்தமுதலும்,காற
மதுகேரிற்றனக்குறுதியாகமுன்கற்றுணர்ந்திடுகல்வியும், விருதாசனாக்
கண்டு முகியசிநேகமும்விவேகிகட்குபகாரமும்விணல்ல விவையெலாங்
கைப்பலனதாகவபிவிர்த்தியாய்வருமென்பர்காண், மருவுலாவியநீபமா

லையுந்தண்டாளமாலையும்புனைமார்பனே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௪௯)

சமயத்துக்குதவாதவை.

கல்லாதபுத்தகங்கணிலெழுதிவிட்டினிற்கட்டிவைத்திடுவித்தையும், காலங்களுக்குதவவேண்டுமென்றன்னியன்கையிற்கொடுத்தபொருளும், இல்லாளைநீக்கியேபிறர்பாரிசமென்றிருக்கின்ற குடிவாழ்க்கையும், எறுமாறாகவேதேசாந்தரம்போயிருக்கின்றபிள்ளைவாழ்வும், சொல்லானதொன்றுமவர்மனமானதொன்றுமாச்சொல்லும்வஞ்சகர்நேசமும், சுகமதாயுண்டென்றிருப்பதெல்லாஞ்சருணதுரிதத்திலுதவாதுகாண், கல்லானைகொங்கைமடமாதுதெய்வானை குறவள்ளிபங்காளநேயா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௰)

திரும்பமாட்டாதவை.

ஆடரவின்வாயினிலகப்பட்டதவளையுமானைவாயிற்கரும்பும், அரிதானசப்பலுற்பாய்மரக்காற்றினிற்கப்பட்டுமெலிகாக்கையும், நாடறியவேசாமாதர்க்குக்கொடுத்ததுநமன்கைக்குளானவுயிரும், நலமாகவேயணைகடந்திட்டவெள்ளமுந்தாய்வேட்டைபட்டமுயலும், தேடியுண்பார்கைக்குளானபலஉடைமையுந்தீவாயையானமனையும், திரள்கொடுங்கோலரசர்க்கைக்கேறுபொருளுந்திரும்பிவாராதென்பர்காண் மாடமிசையன்னங்கொடுத்திரள்கொள்சோணாடுவாழக்கந்திமுதல்வனே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௧)

இதினுமிதுநன்றென்பவை.

கடுகடுத்தாயிரஞ்செய்குவதின்சொலாற்கனி கொண்டழைத்தநன்று, கனவேள்வியாயிரஞ்செய்வதிற்பொய்யுரைகருத்தொடு சொலாமைநன்று, வெடுவெடுக்கின்றதோரவிவேகியுறவினில் விவேகியொடுபகைமைநன்று, வெகுமதிகளாயிரஞ் செய்வதினனைக்காசுவேளைகண்டுதவநன்று, சடிதியிற்பக்குவஞ்சொல்லுங்கொடைக்கிங்குசற்றுமிலையென்னனன்று, சம்பத்துடன்பிணியின்மெலிகுவது நோயற்றதாரித்திரியனன்றுகாண், மடிவினிற்சரியோனையென்னவந்தருள்செய்தமான்மருகனுனமுதல்வா, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடுமலைமேவு குமரேசனே. (௫௨)

பலகூடினுமொன்றற்கீடாகாதவை.

தாரகைகளொருகோடிகாணத்திருக்கினுஞ்சந்திரற்கீடாகுமோ, தாருவிற்கொடிதொணிகள்பலகூடினுமொரு தப்பட்டவோசையாமோ கோரமிருபன்றியின் குட்டிபல்கூடினுமொரு குஞ்சரக்கன்றாகுமோ, கொட்டிபல வாவியிற் பலகூடினுமொரு கோகனகமலராகுமோ, பா

சமிகுமாலைகள்பலகூடினாலுமொரு பைம்பொன்மகமேருவாமோ,பலனிலாப்பிள்ளைகளனேகம் பிறந்துவிற் பனொருவனுக்குநிகரோ;வாரணக்கோலமொரு கரத்திற்பிடித்தொளிறில்வடிவேலணிந்தமுருகா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௩)

அருமையறிதல்.

மணமாலையருமையைப்புனைபவர்களேயறிவர்மட்டிக்குரங்கறியுமோ, மக்களுடையருமையைப் பெற்றவர்களேயறிவர் மலடிதானறிவதுண்டோ, கணவருடனருமையைக்கற்பானமாதறிவள்கணிகையானவளறிவளோ, கருதுமொருசந்நிதியின்பாண்டமென்பதைவருங்களவானாயறியுமோ, குணமானகிளியருமைதனைவளர்த்தவரறிவர்கொடியபூனையுமறியுமோ, குலவுபெரியோரருமை நல்லோர்களேயறிவர் கொடுமூடர்தாமறிவரோ, மணவாளநீயென்றுகுறவள்ளிபின்றொடர வணமூடுதழுவுமழகா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௪)

தீச்சார்பாற்பயன்படாதவை.

மடுவினிற்கஞ்சமலருண்டொருவருணுகாமல் வன்முதலையங்கிருக்கும், மலையினிற்றேனுண்டுசென்றொருவன்கிட்டாமல்மருவியதில்வண்டிருக்கும்,நெடுமைதிகழ்தாழைமலருண்டொருவரணுகாம னீங்காதமுள்ளிருக்கும, நீடுபலசந்தனவிருக்ஷமுண்டணுகாதுநீரளவுசூழ்ந்திருக்கும், குடிமல்கிவாழ்கின்றவீட்டினிற்செல்லாதுகுரைநாய்களங்கிருக்கும், கொடுக்குந்தியாகியுண்டிடையூறுபேசுங் கொடும்பாவியுண்டுகண்டாய், வடுவையுங்கடுவையும பொருவுமிருகண்ணிகுற வள்ளிக்குகந்தகணவா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௫)

கணிகையழிவு.

தேவதாசிகள்விடுசங்கைப்பெருமபேட்டைசேர்ந்திடுபடுக்கைவீடு, தெருவாசல்கட்டில்பொதுவமபலமுடித்ததுகில் செய்யசூதாடுசாலை, மேவலாகியகொங்கைகையாடுதிரள்பந்து விழிமனங்கவாதூண்டிலா, மிக்கமொழிநீர்மேலெழுத்தநிகமோகமொருமின்னவிருதுடைசர்ப்பமாம், ஆவலாகியவல்குலோதண்டம்வாங்குமிட மதிகபடமானதுலகம், அமிர்தவாயிதழ்சித்ரசாலையெச்சிற்குழி யவர்க்காசைவைக்கலாமோ, மாவடிவுகொண்டேயொளித்தஒருசூரனைவதைத்தவடிவேலாயுதா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ()

கலிகாலக்கொடுமை.

தாய்புத்திசொன்னால்மறுத்திடுங்காலமுயர்தந்தையைச்சீறுகாலம், சற்குருவைநிந்தைசெய்காலமெய்க்கடவுளைச் சற்றுமெண்ணாதகா

லம், பேய்தெய்வமென் றுபசரித்திடுங்காலம் பொய்பேசுவார்க்கேற்ற காலம், பெண்டாட்டி வையினுங்கேட்கின்றகாலமாற் பெரியர்சொற்கேளாதகாலம், தெய்வமுடன் பெரியவர் சிறுமையுறுகாலமே குணமிலியவர் பெருகுகாலம், செருவில்விட்டோடினோர்வரிசைபெறுகாலமவசைசெப்புவோர்க்குதவுகாலம், வாய்மதமபேசிமெய்யாயகாரர்க்கு வாய்த்தகலி காலமையா, மயிலேறிவிளையாடுகுகனே புல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ()

அவரவர்க்குரியவை.

கல்வியோடெண்முறற்சனையின்மேல்வட்டமாக்கணவைப்போன்பிதாவாம், கற்றுணர்த்தேதனது புகழாற்பிதாவை ப்ரகாசஞ்செய்வோன்புத்திரன், செல்வமிகுதனைவனே தெய்வமென்றனுதினஞ் சிந்தைசெய்பவள்மனைவியாம், சிநேகிதன்போலவே யன்புவைத்துண்மைமொழி செப்புமவனேசோதரன், தொல்வளமிகுந்தநூற்கரைதெறிக் குறுதிமொழிசொல்லுமவனேகுருவரும், சொன்னநெறிதவறுமல் வழிபாடுசெய்துவரு மய்யனேஇனியசிஷன், வல்விரகமிஞ்சுகாருஞ்சரியுடன்குறவர் வஞ்சியையமணந்தகணவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫அ)

சிறுமையிற்பெருமை.

சேற்றிற்பிறந்திடுங்கமலமலர்கடவுளது திருமுடியின்மேலிருக்கும், இகலிப்பியுடலிற்சனித்தமுத்தரசனது தேகத்தின்மேலிருக்கும், போற்றியிடுபூச்சியின்வாயினூல்பட்டென் றுபூசைக்குநேசமாகும், புகலரியவண்டெச்சிலானதென்றேவர்கொள் புனிதவபிஷேகமாகும், நாற்றியபுலாலொடுபிறந்தகோரோசனைசவாதுபுழுகனைவர்க்குமாம் ஜாதியினத்திற்பிறக்கினுங்கற்றோர்கள் சபையின்மேல்வட்டமன்றோ, மாற்றிச்சுரத்தினை விபூதியாலுடல்குளிர வைத்தமெய்ஞ்ஞானமுதலே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௫௧)

செய்யத்தகாதவை.

தானுசரித்துவருதெய்வமிதுவென் றுபொய்ச்சத்தியஞ்செயில்விடாது, தன்வீட்டிலேற்றிய விளக்கென் றுமுத்தந் தனைக்கொடுத்தாலதுசுடும், ஆனாலுமேலவர்கண்மெத்தவுந்தனதென் றடாதுசெய்யிற்கெடுதியாம், ஆனைதான்மெத்தப்பழக்கமானாலுஞ்செயாதுசெய்தாற்கொன்றிடுமே, தேனைநீயினிதென் றுமீதூண்விரும்பினுநநேகபீடைகளேதரும், ஜெகராஜர்தனுவென்றவேலாதகாரியஞ் செய்தான்மணம்பொறுக்கான், வானுடுபுகழுமொருசேனுடுதனையவிவண் வந்தவதரித்தமுதலே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே

கடுவிலை.

வஞ்சவிவகாரத்தினிய பரிதானங்கள் வருமென்றுதேசமென்றும், வன்பகைகளுமென்றுமயலோரென்றுமிக்கதன வானென்றுமேனையென்றும், இந்தவகைகயைக்குறித் தொருபட்சபாதமோ ரெள்ளளவுரைத்திடாமல், எண்ணமுடனேவிதித பத்தியொடுசாட்சிக்கு மேற்கச்சபாசபதமா, மூக்கவிருதலையுஞ் சமன்செய்துகோல்போன் மொழிக்கிடிற்றர்மமதுகாண், முனிவிமனுடல்பாதிமிருகந்தனக்கென்று முன்றநமர்சொன்னதலவோ, மைந்தனெனவெனறுமைமுலைப்பாலகொடுத்திட வளர்த்தருள்குழந்தைவடிவே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௯௧)

பட்சபாதம்.

ஒரவிவகாரமாவந்தவர் முகம்பார்த் துரைப்போர்மலைக்குரங்காம், உயர்வெள்ளெருக்குடன் முளைத்துவிடுமலரில்லமுறையுமூர்பாழ்த்ததமாம், தாரணியிலிவர்கள் கிளைகெடவேகிலைபோலுருஞ் சயானமாவெழுபிறப்பும், சந்ததியிலாதுழல்வரவர்முகத்தினின் மூத்ததையலே குடியிருப்பாள், பாரமிவரென்றுபுவிமங்கையுநடுங்குவள் பழுத்ததுன்மரணமாவார், பகர்முடிவிலேரவுரவாதிநரகத்தனு பவிப்பரெப்போதுமென்பார், வாரமுடனருணகிரிநாதருக்கனுபூதி வைத்தெழுதியருள்குருபரா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே.)

ஒன்றிலாமையாற்சிறவாதமை.

கொங்கையில்லாதவட்கெத்தனை பணியுடைமை கூடினும்பெண்மையில்லை, கூறுமிறைகல்வியில்லாமலெத்தனைகவிதை கூறினுமப்புலமையில்லை, சங்கையில்லாதவர்க்கெத்தனை விவேகந்தரிக்கினுங்கனதையில்லை, சட்சுவைபதார்த்தவகையுற்றாலுநெய்யிலாச்சாதமுந்திருப்தியில்லை, பங்கயமிலாமலெத்தனைமலர்கள்வாவியிற்பரித்துமேன்மையில்லை, பத்தியில்லாமல்வெகுநியமமாயர்ச்சனைகள் பண்ணினுமனுகைசயில்லை, மங்கையரிலாமனைக்கெத்தனையருஞ்செல்வம்வரினுமில்வாழ்க்கையிலலை மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேச.

அளவுபடாதவை:

வாரியாழத்தையும்புனலெரியுமலைகளையுமாண்டர்கள்ஜனனத்தையும், மன்னவர்களினைவையுமபுருஷர்யோகங்களையும வானினுயர்நீளத்தையும, பாரிலெழுமணலையும பலபிராணிகளையும படியாண்டமன்னவரையும், பருப்பதத்தினிறையையு மீசுரர்ச்செயலையும் பனிமாரிபொழிதுளியையும், சீரியதமிழ்ப்புலவர்வாக்கிலெழுகவிதையுஞ் சித்தர்தமதுள்ளத்தையும, தெரிவையர்கள்சிந்தையையு மிவ்வளவெனும்படிதெரிந்தளவிடக்கூடுமோ, வாரிசமடந்தைகுடிகொண்டநெடுமாலுக்குமருகனெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வய()

பிறர்மனை நயத்தல்.

தந்தாரமன்றியேபரதாரமேனினைவுதனைவைத்தகாமுகற்கு, தயையில்லைநிசமில்லைவெட்கமில்லைசமரினிற்றறுகியுஞ்சற்றுமில்லை, அந்தாரமி

ல்லைதொடர்முறையிலலைநிறையில்லையறிவில்லைமரபுமில்லை,யறமில்லை நிதியில்லையிரவினிற்றனிவழிக் கச்சமோமனதிலில்லை, நந்தாதசனமில்லையினமில்லையெவருக்கு நட்பில்லைகனதையில்லை,நயமில்லையிளமைதனிலவலுமையில்லை முத்திபெறு ஞானமில்லையென்பர்கண்டாய்,மந்தார பரிமளசுகந்தாதிபுனையுமணி மார்பனேயருளாளனே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௧௫

மானம்விடாமை.

கனபாரமேறிற்பிளந்திடுவதன்றியேகற்றூண்வளைந்திடாது,கருதலர்களாலுடைந்தாலுமுயிரளவிலேசனசூரனமரின்முறியான், இனமோரிடுக்கண்வந்துற்றாலுமவேங்கைகேவலசிவனைவிற்கொடாது இதமானபெரியோர் சரீரங்கள்போகினுஞ் செப்புமுறைதவறிடார்கள், வனமேவுகவரிமாவுயிர்போகுமளவுந்தன் மயிரிலொன்றுங்கொடாது, வாராதவாபத்துவருகினுங்கற்புடைய மாதுநிறைதவறிடவாள், மனதாரவுனதடைக்கலமென்றகீரற்கு வன்சிறைதவிர்த்தமுருகா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௧௬

திருவருட்சிறப்பு.

திருமகள்கடாட்சமுண்டாகிலெவருக்குஞ் சிறப்புண்டுகனதையுண்டு, சென்றவழியெல்லாமபெருமபாதையாய்விடுஞ் செல்லாதவார்த்தைசெலலும பொருளொருக்ருமபுமரி யானையாஞ்செல்வமோ புகல்பெறுக்காலும்போலாம். புவியின்முன்கண்டுமதியாதபோர்பழகினவர்போலவேநேசமாவார், பெருமையொடுசாகியிலுயர்ச்சிதருமனுதினைப்பேருப்பிரதிஷ்டையுண்டாம், பிரியமொடுபேசையாளிகூடவுறவாகுவான்பேச்சினிற்பிழைவராது, வருமெனநினைத்தபொருள்கைகூடிவருமதிசவல்லமைகண்பிகவுமுண்டாம், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௧௭

நட்புநிலை.

கதிரவனுதிப்பதெங்கேகளினமெங்கேகளித்துளமலர்ந்ததென்ன கார்மேகமெங்கேபசுந்தோகையெங்கேகூத்தினாட்பானதென்ன, மதியமெங்கேபெருங்குமுதமெங்கேமுகமலர்ந்துமகிழ்கொண்டதென்ன, வல்லிரவுவிடிவதெங்கேகோழியெங்கேமகிழ்ந்துகூவிடுதலென்ன,இதுபரசுதெங்கேயிருந்தாலுமவர்களொரு நேசமொன்றாயிருக்கும, நீதயிகுநல்லோர்களெங்கிருந்தாலுமவர் கிறைபட்சமறவாரென்காண், மதிலுடன்கோபுரமவாவியுமபுடைசூழமருவுசோணாட்டதிபனே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௧௮)

காலமறிதல்.

காகம்பகற்காலம்வென்றிடுங்கூகையைக்கனகமுடியரசர்தாமும் கருதுசயகாலமதுகண்டுநந்தவேலைபிற்காரியமுடித்துவிடுவார் யேகமுங்காக்காலமதுகண்டுபயிர்விளையமேன்மேலுமாறிபொழியும்,மிக்கான

வறிவுளோர்வருதருணகாலத்தின் மிடியாளருக்குதவுவார், நாகரிகமுறுகுயில்வசந்தகாலத்திலேகலமென்றுகந்துகூவும், நல்லோர்குறித்ததைப்பதருமலர்தந்த நாளையின்முடிப்பர்கண்டாய், வாகனையகாலைகன்மாலைபுல்லெனுமுலக வாடிக்கைநிசமல்லவோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. ௬௯

இடனறிதல்.

தாரைதனிலோடுதேர்நீள்கடலிலோடுமோசலதிமிசையோடுகப்பல், தரைமீதிலோடுமோதண்ணீரிலுறுமுதலை தன்முன்னேகரிநிற்குமோ, விரைமலர்முடிப்பரமர்வேணியரவினைவெல்ல மிகுகருடனாலாகுமோ, வேங்கைகளிருக்கின்ற காடுதனிலஞ்சாமல் வேறொருவர்செல்லவசமோ, துரைகளைப்பெரியோரை யண்டிவாழ்வோர்தமைத் துஷ்டர்பகையென்னசெய்யும், துணைகண்டுசேரிட மறிந்துசேரென்றவ்வைசொன்னகதைபொய்யல்லவே, வரையுருமாயனையடுத்தலாற்பஞ்சவர்கள் வன்போர்செயித்ததன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௭௰)

யாக்கைநிலையாமை.

மநுமாந்தாதாமுனானவர்களெல்லோரு மண்மேலிருந்துவாழ்ந்து, மடியாதிருந்தபேரில்லையவர்தேடியதை வாரிவைத்தவருமில்லை, பணியதனைநம்பியேயேர்பூட்டுகதையெனப் பாழானவுடலைநம்பிப் பார்மீதிலின்னம்வெகு நாளிருப்போமென்று பலகோடிவினைவையெண்ணி, அகிதமாய்விருதாவின் மாய்வதேயல்லாம லன்பாகநின்பதத்தை, யர்ச்சித்துமுத்திபெறல்வேண்டுமென்றெண்ணார்களாசைவலையிற்சுழலுவார், வனிதையர்கள்காமவிகாரமேபகையாகு மற்றுமொருபகையுமுண்டோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவு ()

கேட்டகத்திகழ்ச்சி.

வேட்டகந்தன்னிலேமருகன்வந்திடுமளவில்மேன்மேலுமுபசரித்து, விருந்துகள்சமைத்துநெய் பாற்றயிர்பதார்த்தவகை வேண்டுவதெலாமமைப்பார் ஊட்டமிகுவர்க்கவகைசெய்திடுவர்தயிலமிட்டுறுதியாகமுழுகுவிப்பார், ஓயாதுதின்னவெகுபாக்கிலைகொடுத்திடுவருற்றநாளுகிலோ, நாட்டமொருபடியிறங்குவதுபோன்மரியாதைநாளுக்குநாட்குறைவுறும், நகைசெய்வர்மைத்துனர்களுவல்பார்ப்போமெனநாணுமன்மாமிசொல்லாள், வாட்டமனையாளொருகருமமபாய்மதிப்பவன்மட்டியிலுமட்டியன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௭௨)

செல்வநிலையாமை.

ஓடம்விடுவிடமணமணற்சுடுஞ்சுடுமிடமுமோடமிகவேநடக்கும் உற்றதோராற்றின்மடுமேடாகுமேடெலாமுழுபுனல்கொண்மடுவாய்

விடும், காடுகாடாகுழுயர்காடுகொடாகினிடுவின்சகடுமேல்கீழதாய், நடையுருசக்கைதபலகூடுமுடனேகலையு கன்னிலவுமிருளாய்விடும், நீடு பகல்போய்பின்பிறவாகுமிரவுபோல நிறைகபறபோதாய்விடும், கிடியோர்மிடித்திடுவர் மிடியோர்செழித்திடுவர்கிசமல்லவாழ்வுகண்டாய், மாடுமனைபரிசனமக்கணிதிபூஷணமுமருவுகனவாகுமன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (எ௨)

பிறந்தாற்பெரும்பேறு.

சடமென்றெடுத்தாற் புவிக்குநல்லவனென்று தன்பேர்விளங்கவேண்டும், திருவுடனிதல்லாது மெய்ஞ்ஞானியென்றவதரிக்கவேவேண்டுமல்லால், இடமினியரணசூரவீரனிவனென்னவே திசைமெச்சவேவேண்டுமெல்லால், தேகியெனவருபவர்க்கில்லையென்னாமலேசெய்யவேவேண்டுமல்லால், அடைவுடன்பலகல்வியாராய்ந்துவித்துவானாகவேவேண்டுமல்லால், அறிவானதுரைமக்கள் வரவேண்டுமிவரதிசபூபாலரையா,வடகுவடுகிடுகிடெனவெழுகடலுமலையெறியமணியுரகனமுடிகணெரிய, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரே. ()

வேசைசிக்கை.

தேடித்தம்வீட்டிற்பணக்காரர்வந்திடிற்றேகசீவன்போலவே, சிநேகித்தவுவமையொருபொழுதுகாணாவிடிற்செல்லுறுதென்னமென்றே, கூடிச்சுகிப்பரென்னுசையுண்மேலென்று கூசாமலாணையிடுவார், கொங்கைகையைவெடிக்கப்பிடிக்கக்கொடுத்திசழ கொடுப்பர்சுமபனாமுகப்பர், வேடிக்கைபேசியேகைமுதல்பறித்தபின்வேறுபடசிக்கைசெய்து, விடவிடப்பேசுவார்தாய்க்கலகமூட்டியேவிட்டுத்துரத்திவிடுவார், வாடிக்கையாயிந்தவண்டப்பரத்தையர்மயக்கத்தைகைக்கம்பலாமோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (எ௪)

இதற்கிது வுறுதியெனல்.

கைக்குறுதிவேள்விமனைக்குறுதிமனையாள் கவிக்குறுதிபொருளடக்கம்-கன்னியர்தமக்குறுதிகற்புடைமைசொற்குறுதிகண்டிடிற்சத்தியவசனம், மெய்க்குறுதிமுன்பின்சபைக்குறுதிவித்யவசனம் வேசையர்க்குறுதிதேடல் விரகருக்குறுதிபெண்மூப்பினுக்குறுதியுண்வீரருக்குறுதிதீரம-செய்க்குறுதிநீருபாக்குறுதிசெங்கோல் செழும்படைக்குறுதிவேழம்-செல்வந்தனக்குறுதிபிள்ளைகளவற்குறுதிசேர்க்கிடுஞ்சற்சனர்களாம்-மைக்குறுதியாகியவிழிக்குறமடந்தைசுர மங்கைமருவுந்தலைவனே-மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (எ௫)

வறுமையிற்சிறுமை.

வறுமைதான்வந்திடிற்றாய்பழுதுசொல்லுவாள் மனையாட்டிசற்றுமெண்ணாள்-வாக்கிற்பிறக்கின்றசொல்லனைத்துமே பொல்லாதவசனமாய்வருந்துவினையும்-சிறுமையொடுதொலையாவிசாரமேயல்லாது சிந்தையிற்றைரியமில்லை-செய்யசபைதன்னிலேசெல்லவரவெட்கமாஞ் செல்வரைக்காணிலும்-உறுதிபெருவீரமுங்குலைந்திடுமவிருந்துவரினுயிருடன்செத்தபிணமாம் - உலகம்பழித்திடும் பெருமையோர்முன்புசென்றொருவரோடுசெய்திசொன்னால் - மறுவசனமுஞ்சொல்லார் துன்பினிற்றுணைபயில வந்தணுகிடாதருநோவாய்-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (எஎ)

தீச்சார்பானன்மையிழப்பு.

ஆனைதண்ணீரிலிழல்பார்த்திடத்தவளை சென்றங்கேகலக்கியுலவும்-ஆயிரம்பேர்கூடிவீடுகட்டிடிலேத மழைதூறலுமுடனேவரும்-ஏனைநற்பெரியோர்கள்போசனஞ்செயுமளவி லிக்கிகதிசைகேடதாம்-இன்பமிகுபசுவிலேகன்றுசென்றூட்டிடிற் றினியகோனதுதடுக்கும்-சேனைமன்னவரென்னகருமமியம்பினுஞ் சிறியோர்களாற்குறைபடும்-சிங்கத்தையுமபரிய ரிஷபத்தையும்பகைமை செய்ததொருநரியல்லவோ - மானையுந்திகழ்தெய்வயானையுந்திகழுமணி மார்பனேயருளாளனே-மயிலேறிவிளையாடுகுகனேபுல் வயனீடுமலைமேவுகுமரேசனே.()

இன்னவர்க்கிதுவில்லையெனல்.

ஆறுதண்ணீர்வற்றிவிட்டாலுமூற்றுநீரமுதபானங்கொடுக்கும் ஆதவனையொருபாதிகட்செவிமறைத்தாலுமப்போதுமுதவிசெய்வன் கூறுமதிதேய்பிறையதாகக்குறைந்திடினுங்குவலயத்திருள்சிதைக்கும்-கொல்லைதான்சாவிபோய் விட்டாலுமங்குவரு குருவிக்குமேச்சலுண்டு - விருடனுதாரிகாமிடியவன்போதினிலு மிகவாடிவருபவர்க்கு-வேறுவகையில்லையென்றுரையாதியன்றள வியந்துமகிழ்ந்துதவுவான்-மாறுபடுசூரசங்காரகெம்பீரனே வடிவேலணிந்தமுருகா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. எகூ

இன்னவர்க்கிதுவில்லையெனல்.

சார்பிலாதவருக்குநிலையேதுமுதலிலாதவருக்கிலாபமேது-தயவிலாதவர்தமக்குறவேதுபணமிலாதார்க்கேதுவேசையுறவு-ஊரிலாதவர்தமக்காசேதுபசிவேளையுண்டிடார்க்குருசியிலையே-நன்மையில்லாதவர்க்கறமேதுமுயல்விலார்க்குறுவதொருசெல்வமேது- சேர்விலாதவருக்குமற்றுமொருபயமேது சுகமிலார்க்காசையேது-துர்க்குணமிலாதவர்க்கெதிராளியேதிடர்செய் துஷ்டர்க்கிரக்கமேது-மார்புருவவாளிமேலஸ்திரமவிடுத்தகெடுமான்மருகனானமுருகா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (அய)

இதிலிது நன்றெனல்.

பஞ்சரித்தருமையறியார்பொருளையெய்தலிற்பலர்மனைப்பிச்சை
நன்று-பரிதாகவுபசாரமில்லாவிருந்தினிற்பட்டினியிருக்கைநன்று-த
ஞ்சமொருமுயலையடுவென்றிதனில்யானையொடுசமர்செய்துதோற்கைந
ன்று-சரசகுணமில்லாதபெண்களைச்சேர்தலிற் சன்னியாசித்தனன்று-
அஞ்சலர்தங்களொடுநட்புறவிருப்பதனிலாவிறைபெழகுவதுநன்-ற
ந்தணர்க்காபத்திலுதவாதிருப்பதனி லாருயிர்விடுத்தனன்று-வஞ்சகரு
டன்கூடிவாழ்தலிற்றனியேவருந்திடுஞ்சிறுமைநன்று-மயிலேறிவிளை
யாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (அக)

நிலையாதவை.

கொற்றவர்கள்ராணுவமுமாறுநேராகியகுளங்களுநீர்தாசியுறவும்-
குணமிலார்நேசமும் பாம்பொடுபழக்கமுங் குலவுநீர்விளையாடலும்-
பற்றலார்தமதிடை வருந்தவிசுவாசமும் பழையதாயாதிநின்றும்-பா
தாரமாதரதிபோகமும்பெருகிவருபாங்கானவாற்றுவரவும்- நற்றுமெ
ருகார்ப்புத்திகேட்கின்றபேரறிவுநல்லமதயானைநட்பும்- நாவினல்லுற
வுமொருநாள்போலிராதவைகணம்பப்படாதுகண்டாய்- மற்றுமொரு
துணையில்லைநீதுணையெனப்பரவும்வானவர்கள்சிறைமீட்டவா • மயிலே
றிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (அஉ)

நற்புலவர்தீப்புலவர்செயல்.

மிக்கானசோலையிற்குயில்சென்றுமாங்கனி விருப்பமொடுதேடி
நாடு-மிடைகருங்காகங்களெக்கனியிருந்தாலும் வேப்பங்கனிக்குநா
டும்-எக்காலும்வரிவண்டுபங்கேருகத்தினி லிருக்கின்றதேனைநாடும்-ஈ
த்தனைசுகந்தவகையுற்றாலுமுருகுவண்டினங் தூர்மலத்தைநாடும்-தக்
கோர்பொருட்சுவைநயங்களெங்கேயென்று தாம்பார்த்துகந்துகொள்
வார்-தாழ்வானவன்கண்ணர்குற்றமெங்கேயென்று தமிழிலாராய்வர்க
ண்டாய்-மைக்காவிவிழிவள்ளிதெய்வகுஞ்சரிதழுவு மாபனேயமரர்த
லைவா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே()

தாழ்தற்பெருமை.

வேங்கைகள்பதுங்குதலுமாமுகிலொதுங்குதலும்விரிசிலைகுனிக்
கிடுதலு-மேடமதகளறிடலுமயானைகளொடுங்குதலுமவெள்விடை
ள்தாளிவிழலும் - மூங்கில்கள்வணங்குதலுமேவெவரிணங்குதலுமு
ரியர்கணையத்தொகொன்று-மூதிர்படையொதுங்குதலும்வினைஞர்களட
ங்குதலுமுறவினர்பயந்திடுதலும்- ஆங்காரவுசாய்தலுமகிழ்மலருலர்
ந்திடலுமாயர்குழற்குடிபடலும்-அமபுவியிவிவைகாரியங்களுக்கல்லா
மலதளுக்கிளைப்புவருமோ-மாங்கனிக்காவரனைவலமதுபுரிந்துவளர்மத
கரிக்கிளையமுருகா-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவு
குமரேசனே. (சஅ)

தெய்வச்செயல்.

சோடாய்மரத்திற் புறாவிரண்டிருந்திடத் தொலைவுகண்டேவேடுவன், தோலாமலம்பெய்ய வேண்டுமென்றொருகணை தொடுத்துவில்வாங்கிநிற்க, ஊடாடிமேலே யெழும்பிடிலடிப்பதற் குலவுராசாளிகூட, உயரப்பறந்துகொண் டேதிரியவப்போது தைத்தசிலைவேடனடியில், சோடாகவல்விஷந் தீண்டிடவவன்விழச் சிலையிற்றொடுத்தவாளி, சென்றிராசாளிமேல் தைத்துவிழவவ்விரு சிறைப்புறாவாழ்ந்ததன்றோ, வாராமலிவையெலாஞ் சிவன்செயல்களல்லாது மனச்செயலினாலும் வருமோ, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. அரு

பாடலியல்பு.

எழுத்தசைகள்சீர்தளைக ளடிதொடைகள்சிதையா திருக்கவேவேண்டுமப்பால், ஈரைமபொருத்தமொடு மதுரமாய்ப்பளபளப் பினியசொற்கமையவேண்டும், அழுத்தமிக்குறளினுக் கொப்பாகவேபொருளடக்கமுமிருக்கவேண்டும், அன்யானபரவின மிசைந்துவரல்வேண்டுமலங்காரமுற்றநடையில், பழுத்துளவழுந்தோஷை யுற்றுவரல்வேண்டும் படிக்குமிசைகூடல்வேண்டும், பாங்காகமின்னவைபொருந்திடச்சொற்கவிதை பாடிச்சிறப்பென்பர்காண், மழுத்தினஞ்செங்கைதனில் வைத்தசங்காளனருள் மைந்தனெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. அசு

விபூதிதரிக்குமுறைமை.

பத்தியொடுசிவசிவா வென்றுதிருநீற்றைப் பரிந்துகையாலெடுத்து, பாரினில்விழாதபடி யண்ணாந்துசெவியொடு பருத்தபுயமீதிலொழுக, சுத்தமூவிரல்களா னெற்றியிலழுந்தவுற நினைவாய்த்தரிப்பவர்க்கு, தீவினையணுகாது தேகபரிசுத்தமாந் தீங்காமணிமலனங்கே, சத்தியொடுசித்தப்விளை யாடுவன்முகத்திலே தாண்டவஞ்செய்யுந்திரு, சஞ்சலம்வராதுபர கதியுதவுமிவரையே சத்தியஞ்சிவமென்னலாம், மத்தினியமேருவைத் தழுகினக்கடையுமான்மருகனானமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே அஎ

விபூதிவாங்குமுறைமை.

பரிதனிலிருந்துமிக சிவிகையிலிருந்துமுயர் பலகையிலிருந்துமிகவே, பாங்கானவம்பலந் தனிலேயிருந்தும பருத்ததிண்ணையிலிருந்தும், தெரிவொடுகொடுப்பவர்கள் கீழ்நிற்கமேனின்று திருநீறுவாங்கியிடினும், செங்கையொன்றாலும்விரன் மூன்றாலும்வாங்கினுந் திகழ்தம்பலத்திலேனும், அரியதொருபாதையி னடக்கின்றபோதிலுமசுத்தநிலமானவதிலும், அங்கேதரிக்கிலுந் தந்திடிற்கொள்ளினுமவர்க்குநரகென்பர்கண்டாய், வரிவிழிமடந்தைகுற வள்ளிநாயகிதனைமணந்துமகிழ்சகுந்தனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. அஅ

இவ்வுருப்பாற்பயனில்லையெனல்.

தேவாலயஞ்சுற்றி டாதகாலென்னகால் தெரிசியாக்கண்ணென்
னகண், தினமுமேநின் கமல பாதத்தைநினையாத சிந்தைதானென்ன
சிந்தை, மேவாகமஞ்சிவ புராணமவைகேளாமல் விட்டசெவியென்ன
செவிகள், விமலனைவணங்காத சென்னியென்சென்னிபணி விடை
செயாக்கையென்னகை, நாவாரநினையேத்தி டாதவாயென்னவாய் நற்
றீர்த்தமூழ்காவுடல், ஞாலத்தென்னவுடல்பாவியாகியஜநந மெண்ணி
றைத்தபலனேதுகாண், மாவாகிவேலைதனில் வருசூரன்மார்புருவ வடி
வேலைவிட்டமுருகா, மயில்மேலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலை
மேவுகுமரேசனே. ௮௯

நற்பொருளோடு தீப்பொருள்பிறத்தல்.

கோகனகமங்கையுடன் மூத்தவள்பிறந்தென்ன குலவுமாட்டின்
கணேர்தான், கூடப்பிறந்தென்ன தண்ணீரினுடனே கொடும்பாசிபுற்
றென்ன, மாகருணைமருவிநறை சங்குசப்பிறந்தென்ன வல்லிரும்பி
ற்றுருந்தான், வடதேபிறந்தென்ன நெடியசந்தனமொக்குள் வன
மொடுபிறந்தென்னவும், பாகமிகுசெந்நெலொடு பதர்தான்பிறந்தெ
ன்ன பண்ணுமொருதாய்வயிற்றில், பண்புறுவிவேகியொடு சடவர்கள்
பிறந்தென்ன பலனேதுமில்லையன்றே, மாகனகமேருவைச் சிலையெ
னவளைத்தசிவன் மைந்தனெனவந்தமுருகா, மயில்மேலேறிவிளையாடு குக
னேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௰

தன்னிலைத்தாழ்வு.

குலமானசம்மட்டி குறடுசைக்குதவியாய்க் கூரிருப்புகளைவெல்
லும், கோடாலிதன்னுளே மரமதுநுழைந்தநன் கோத்திரமெலாமழி
க்கும், கலமானபார்வைசேர் குருவியானதுவந்து நன்னுடிறவைகளை
மாய்க்கும், கட்புடன்வளர்ந்தகலை மானென்றுசென்றுதன் னவில்சா
திதனைவிழுக்கும், உலவுநற்குடிகளிற் கோளர்களிருந்துகொண் டிற்
றுறையிடழிப்பார், உளவிலாமனுராழியாதெனச்சொல்லு முல
கமொழிநிசமல்லவோ, வலமாகவந்தர னிடத்தினிற்கனிகொண்டமத
யானைதன்சோதரா, மயில்மேலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமே
வுகுமரேசனே. ௯௧

வினுக்குணமுத்தல்.

குயின்முட்டைதனதென்று காக்கையடைகாக்குங் குணம்போ
லுமீக்கனெல்லாம் கூடியேதாமுண்ண வேண்டுமென்றேதினங் கூடு
வைத்தநறவுபோலும், பயில்சோரருக்குப் பிறந்திடத்தாயெற்றபால
னென்றுட்கருதியே, பாராட்டிமுத்தமிட் டன்பாய்வளர்த்திடும்பண்
பிலாப்புருஷர்போலும், துயிலின்றிநிதிகளைத் தேடியேபொருள்வர்பாற்
றெரிந்தெரித்திடாமல், தொகைபண்ணிவைத்திடுவர் கைக்கொ
ண்டுபோகவருசொந்தமானவர்வேறுகாண், வயிரமொடுசூரனைச் சங்
காரஞ்செய்து வானவர்க்குதவுநல்லவா, மயில்மேலேறிவிளையாடு குகனேபு
ல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௨

இதுசேரின் இதுபயன்படாதெனில்.

அழலுக்குளேவிட்டநெய்யும்பெருக்கான வாற்றில்கரைத்தபுளியும், அரிதானகமரிற கவிழ்த்திட்டபாலும்வரு மலகைகட்கிடுபூசையும, சுழல்பெருங்காற்றினில் வெடித்தபஞ்சுமயனைற செக்கீழும்பனிநீரினுள், சொல்லரியகாட்டுக் கெடுத்தநிலவுங்கடல சுழிக்குளேவிடுகப்பலும், விழலுக்கிறைத்திட்ட தண்ணீருமிகமாய வேசைக்களித்தபொருளும், வீணருக்கேசெய்தநன்றியும்பலனில்லை விருதாவிதென்பர்கண்டாய், மழலைப்பசுங்கிள்ளை முன்கைமலைமங்கைதரு வண்ணக்குழந்தைமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௩

கைவிடத்தகாதவர்.

அன்னைசுற்றங்களையு மறைநான்முதலா வடுத்துவருபழையோரையும, அடுபகைவரிற்றப்பி வந்தவொருவேந்தனையு மன்பானபெரியோரையும், தன்னைநம்பினவரையு மேழையானவரையுஞ் சார்ந்தமனையோர்தம்மையும், சருணமிதுவென்றுநல் லாபத்துவேளையிற் சரணம்புகுந்தோரையும் மன்னயமதாகமுன் னுதவிசெய்தோரையு நாளுந்தனக்குறுதியாய், நத்துசேவகரையுங்காப்பதல்லாதுகை நழுவவிடலாகாதுகாண், மனையிலுமினியசெஞ் சேவலுஞ்செங்கைமால் வைத்தசரவணபூபனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௪

தகாதசெயல்.

அண்டிவருமுற்றார் பசித்தங்கிருக்கவே யன்னியர்க்குதவுவோரும், ஆசுதபுபெரியோர்செய் நேசத்தைவிட்டுப்பி னற்பரையடுத்தபேரும், கொண்டவொருமனையா ளிருக்கப்பரத்தையைக் கொண்டாடிமருவுவோரும், கூறுசற்பாத்திர மிருக்கவிகுதானமது குணமிலார்க்கீந்தபேரும், கண்டுவருபுதியோரை நம்பியேபழையோரைக் கைவிட்டிருந்தபேரும், கரிவாலைவிட்டுநரி வால்பற்றிநதிநீர் கடக்கின்றமரியாதைகாண், வண்டடர்கடப்பமலர் மாலிகாபரணமணி மார்பனேயருளாளனே, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடுமலைமேவு ( )

நல்லோர்முறை.

கூடியேசோதரர்கள் வாழ்தலாலுந்தகு குழந்தைபலபெறுதலாலுங், குணமாகவேபிச்சை யிட்டுண்கையாலுங் கொடியவிதூர்க்கிடுதலாலும். தேடியேதெய்வங் களுக்கீதலாலுந் தியாகஞ்செலுத்தலாலுங், சிறியோர்கள்செய்திடும் பிழையைப்பொறுத்துச் சினத்தைத்தவிர்த்தலாலும், நாடியேதாழ்வாய் வணங்கலாலுமிக நல்வார்த்தைசொல்லலாலும், நன்மையேதருமலாற் றாழ்ச்சிகள்வராவிவை நல்லோர்கள்செயுமுறைமைகாண். வாடிமனநொந்துதமிழ் சொன்னாற்கீரர்முன் வந்துதவிசெய்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௫

அடைக்கலங்காத்தல்.

அஞ்சலென்னுநாயினுடல் தருமன்சுமந்துமுன் னுறவைக்கடத்துவித்தான், அடைக்கலமெனுங்கபோதகனைமோனுடனருச்சுனன்சம

ர்புரிந்தான், தஞ்சமெனவந்திடு புறவுக்குமுன்சிபி சரீரந்தனைக்கொடுத்தான், தடமலைச்சிரகரிந் தவனைமுன்காக்கத் ததீசிமுதுகென்பளித்தான், இன்சொல்லுடனேபூச தயவுடையராயினோ ரெவருக்குமாபத்திலே, இனியதன்சீவனை விடுத்தாகிலுங்காத் திரட்சிப்பதென்பரென்றே, வஞ்சக்கிரவுஞ்சனொடு தாருகனைசிங்கமுகன் வளர்சூரனுடல்கீண்டவர், மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௭

யோக்கியாயோக்கியம்.

பாலினொடுதேன்வந்து சேரில்ருசியதிகமாம் பருகுநீர்சேரிலென்னும், பவளத்தினிடைமுத்தை வைத்திழைத்தோபிதம படிகமணி கோக்கிலென்னும், மேலினியமன்னர்பால் யானைசேர்வதுகனைதமே ஷமதுசேரிலென்னும், மிக்கானசங்குத்தி னவமணியுறிற்பெருமை வெண்கல்லழுத்திலென்னும், வாலிபமினோர்களிட னிளையோர்கள்சேரினலம் வளைகிழவர்சேரிலென்னாம், மருவுநல்லோரிடம் பெரியோர் வரிற்பிரியம் வருகவவர்சேரிலென்னும், மாலினைகரித்தமணி மார்பனேமாதீன்ற வள்ளிக்குவாய்த்தகணவா, மயிலேறிவிளையாடு குகனே புல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௮

பெரியோரியல்பு.

அன்னதானஞ்செய்தல் பெரியோர்சொல்வழிநிற்ற லாபத்தின் வந்தபேருக், குபயங்கொடுத்திடுத னல்வினைஞ்சேர்ந்திடுத லாசிரியன் வழிநின்றவன், சொன்னமொழிதவறாது செய்திடுதல்தாய்தந்தை துணையடியருச்சனைசெயல், சோம்பலில்லாமலுயிர் போகினும்வாய்மொழி தொல்புவியினாட்டிவிடுதல், மன்னரைச்சேர்ந்தொழுதல் கற்புடையமனைவியொடு வைகினுந்தாமரையிலை, மருவுநீரெனவனுதலிவையெலாமேலவர்த மாண்பரென்றுரைப்பரென்றே, வன்னமயின்மேலிவர்ந் திவ்வுலகையொருநொடியில் வலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடு குகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. ௯௯

நூற்பயன்.

வன்னமயிலேறிவரு வேலாயுதக்கடவுள் மலைமேலுகந்தமுருகன், வள்ளிக்கொடிக்கினிய வேங்கைமரமாகினோன் வானவர்கள்சேனாபதி, கன்னன்மொழியுமையா டிருப்புதல்வனரன்மகன் கங்கைபெற்றருள்புத்திரன், கணபதிக்கிளையவொரு மெய்ஞ்ஞானதேசிகக் கடவுளாவினன்குடியினான், பன்னரியபுல்வயலில் வாலகுமரேசர்மேற்பரிந்துகுருபாததாசன், பாங்கானதமிழாசிரியவிருத்தத்தினைப் பாடலொருநூறுகோடி, நன்னயமதாகப் படித்தபேர்கேட்டபேர் நாடோறுங்கற்றபேர்கள், ஞானயோகம்பெறுவர் பதவியாவும்பெறுவர் நன்முத்தியும்பெறுவரே. ௱

குமரேசர்சதகம் - முற்றிற்று.

ஶ்ரீரஸ்து.

—*—

கருடதண்டகாதிவிஷயஸூசிகா.